மக்கள் தீர்ப்பை தலைவணங்கி ஏற்கிறோம்! சிறப்பான ஆட்சியைத் தந்த நாம்

# சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்!

## வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மே 6–**

**மக்கள் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்கிறோம் எனவும், வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள் என்றும், சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம் எனவும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–**



கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஏராளமான திட்டங்களை உருவாக்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லாட்சியை வழங்கினோம். தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் உயர்த்தினோம். தேர்தல் களத்தில் எங்களது சாதனைகளைச் சொல்லியே வாக்கு களைக் கேட்டோம்.

மக்களுக்குச் செய்து கொடுத்த நலத் திட்டங்கள் தொடருவதற்கு வாக்கு கேட்டு நாங்கள் பரப்புரை செய்தோம்.

**அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உண்மையான ஆட்சியைத் தந்தேன்!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரித்து வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்க மறந்தவர்களுக்கும் சேர்த்தே ஆட்சி நடத்தினேன்.

அனைத்து மக்களுக்கும் உண்மையாக இருந்தேன். நான் எனது மனச்சாட்சிப்படியே செயல்பட்டேன்.

**என்னோடு உழைத்த உடன்பிறப்புகளுக்கு நன்றி!**

நான் எனது சக்தியை மீறி உழைத்தேன். என்னைப் போன்றே களத்தில் உழைத்த என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி!

எங்களோடு தோளோடு தோள் நின்ற தோழமை இயக்கத் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவருக்கும் நன்றி !

எனது அரசியல் பொதுவாழ்வில் அதிகப்படியான வெற்றியையும் பார்த்துள்ளேன்; தோல்விகளையும் சந்தித்துள்ளேன்.

**இலட்சியமும் கொள்கையும்தான் முக்கியம் எனச் செயல்படுபவன்!**

எனவே இலட்சியமும் கொள்கையும்தான் முக்கியமே தவிர, வெற்றி தோல்விகள் மட்டுமல்ல என்று செயல்படக் கூடியவன் நான்.

அதனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் பயணம் தொய்வில்லாமல் தொடரும்.

இதுவரை மக்களுக்காகச் சிறப்பான ஆளும்கட்சியாகச் செயல்பட்ட தி.மு.க. – இனி சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படும்.


இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## மு.க.ஸ்டாலின் பெருமிதத்திற்குரியவர் !

### ஆம் ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் பாராட்டு!

புதுடெல்லி, மே 6–



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலையொட்டி தி.மு.க.தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார், அதில் அவர் கல்வி, சுகாதாரம், பெண்கள் மேம்பாட்டை கொள்கை களாக முன்வைத்து மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தலை சந்தித்தார். தனது கொள்கைகளை முன்வைத்து தேர்தலை சந்தித்த மு.க.ஸ்டாலின் பெருமிதத்துக்குரியவர் என்று அரவிந்த் கெஜ்ரிவால் பாராட்டினார்!

மேலும் அவர் நாடு முழுவதும் மோடியின் செல்வாக்கு அதலபாதாளத்திற்குச் சரிந்துள்ள நிலையில், மேற்கு வங்கத்தில் வென்றது எப்படி? என்று ஆம் ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றது குறித்து கேள்வி எழுப்பி ஆம் ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், டெல்லி மற்றும் மேற்கு வங்கத்தில் மோடி அலை வீசியபோது கூட பா.ஜ.க. வெற்றி பெறவில்லை என கூறியுள்ளார். 2015ல் டெல்லியிலும், 2016 மேற்குவங்கத்திலும் பா.ஜ.க. தலா வெறும் 3 இடங்களை மட்டுமே பெற்றது என குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், தற்போது நாடு முழுவதும் மோடியின் செல்வாக்கு அதலபாதாளத்திற்குச் சரிந்துள்ளது என சுட்டிக்காட்டியுள்ள அரவிந்த் கெஜ்ரிவால், டெல்லியில் கடந்த அண்டும், தற்போது மேற்குவங்கத்திலும் பா.ஜ.க. வென்றது எப்படி என கேள்வி எழுப்பியுள்ளார்.

---

தமிழ்நாட்டு மக்கள் பா.ஜ.கவை முற்றிலும் புறக்கணித்துள்ளனர்!

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்கிறோம்!

### வைகோ, தொல்.திருமாவளவன் எம்.பி., பெ.சண்முகம், மு.வீரபாண்டியன் பேட்டி!

**சென்னை, மே 6–**

**“தமிழ்நாட்டு மக்கள் பா.ஜ.கவை முற்றிலும் புறக்கணித்துள்ளனர்'' என்றும் “மக்களின் தீர்ப்பை மதிக்கின்றோம்” என்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் வைகோ, தொல்.திருமாவளவன் எம்.பி., பெ.சண்முகம், மு.வீரபாண்டியன் ஆகியோர் கூறியுள்ளனர்.**

**சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்த பின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள், செய்தியாளர்கள் அளித்த பேட்டி வருமாறு:–**









**ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ,**

மக்களின் தீர்ப்பை மதிக்கின்றோம் என்று தெரிவித்தார். கடந்த 5 ஆண்டுகளில் தி.மு.க. அரசு பல்வேறு சாதனைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது என்றும், தி.மு.க.விற்கு பக்கப்பலமாக ம.தி.மு.க. துணை நிற்கும் என்றும் வைகோ கூறினார்.

**தொல்.திருமாவளவன் எம்.பி.,**

தமிழ்நாட்டில் காலூன்ற நினைத்த பா.ஜ.க.,வின் எண்ணத்தை முறியடித்துள்ளோம் என்று விடுதலைசிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார். விடுதலை சிறுத்தைகள் கட்சி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் தொடர்வதாக திருமாவளவன் கூறினார்.

**பெ.சண்முகம், மு.வீரபாண்டியன்!**

பா.ஜ.க., அ.தி.மு.க., கூட்டணியை தோற்கடிக்க வேண்டும் என்ற தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குகூட்டணியின் நோக்கம் வெற்றி அடைந்துள்ளது என்றும், பா.ஜ.க.,வை தமிழ்நாட்டு மக்கள் முற்றிலும் புறக்கணித்துள்ளனர் என்றும் பெ.சண்முகம், மு.வீரபாண்டியன் ஆகியோர் தெரிவித்தனர்.

---

## சட்டமன்றத் தேர்தல்: தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி 73 தொகுதிகளை கைப்பற்றியது !

### உதயநிதி ஸ்டாலின் – முன்னணியினர் வெற்றி!

***சென்னை, மே 6–***

***தமிழ்நாடு உள்ளிட்ட ஐந்து மாநிலங்களில் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களின் வாக்கு எண்ணிக்கை நேற்று முன்தினம் காலை 8 மணிக்குத் தொடங்கியது. தமிழ்நாட்டில் 73 இடங்களில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. இதில் தி.மு.க. மட்டும் 59 தொகுதிகளை கைப்பற்றியுள்ளது. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் பல அமைச்சர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.***

*தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு கடந்த மாதம் 23-ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று முன்தினம் எண்ணப்பட்டன.*

*இந்நிலையில் சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி தொடர்ந்து நடைபெற்றது. இதில், தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் 75 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன. மேலூர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் விஸ்வநாதன் வெற்றி பெற்றதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை வேட்பாளர் ஜமால் முகமது, விளவங்கோடு பிரவீன், மற்றும் குளச்சல் தாரகை கத்பட் ஆகிய காங்கிரஸ் வேட்பாளர்கள் முன்னிலையில் தொடர்ந்து இருந்து வந்தனர்.*

*தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் விருத்தாசலத்தில் பிரேமலதா விஜயகாந்த் வெற்றி பெற்றுள்ளார்.*

*நாகப்பட்டினத்தில் மனிதநேய மக்கள் கட்சியின் ஜவாஹிருல்லாவும் வெற்றி பெற்றுள்ளார்.*

**கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் வெற்றி!**

*துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் வெற்றி பெற்றார்.*

*அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, அனிதா ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ். இராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, எஸ்.எஸ்.சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, கோவி. செழியன், சி.வெ. கணேசன், சிவ.வீ.மெய்யநாதன் உள்ளிட்ட அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் செந்தில் பாலாஜி, ஓ.பன்னீர்செல்வம், எஸ்.வைத்தியலிங்கம் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.*

*மேலும் நாகர்கோவில் - எஸ்.ஆஸ்டின், பாளையங்கோட்டை - மு.அப்துல் வஹாப், ஆலங்குளம் - முனைவர் பால் மனோஜ் பாண்டியன், தென்காசி - டாக்டர் கலை கதிரவன், வாசுதேவநல்லூர் - ஈ.ராஜா, கோவில்பட்டி - கா.கருணாநிதி, திருச்செந்தூர் - அனிதா ராதாகிருஷ்ணன், விளாத்திகுளம் - ஜி.வி.மார்கண்டேயன், முதுகுளத்தூர் - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், இராமநாதபுரம் - காதர் பாட்சா (எ) முத்துராமலிங்கம், பரமக்குடி (தனி) - கே.கே.கதிரவன், திருச்சுழி - தங்கம் தென்னரசு, அருப்புக்கோட்டை - கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சாத்தூர் - அ.கடற்கரை ராஜ், போடிநாயக்கனூர் - ஓ.பன்னீர்செல்வம், ஆண்டிப்பட்டி - ஆ.மகராஜன்,*

*திருமங்கலம் - சேடப்பட்டி மு.மணிமாறன், ஆலங்குடி - சிவ. வீ.மெய்யநாதன், திருமயம் - எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை - டாக்டர் வை.முத்துராஜா, பேராவூரணி நா.அசோக்குமார், பட்டுக்கோட்டை - கா.அண்ணாதுரை, ஒரத்தநாடு - ஆர்.வைத்திலிங்கம், திருவையாறு - துரை. சந்திரசேகரன், திருவிடைமருதூர் - முனைவர் கோவி. செழியன், திருவாரூர் - பூண்டி கே. கலைவாணன், பூம்புகார் - நிவேதா முருகன், குறிஞ்சிப்பாடி - எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், திட்டக்குடி (தனி) சி.வி.கணேசன், குன்னம் - சா. சி.சிவசங்கர், மண்ணச்சநல்லூர் - சீ.கதிரவன், திருச்சி மேற்கு - கே.என்.நேரு, குளித்தலை - சூரியனூர் அ.சந்திரன், அரவக்குறிச்சி - மொஞ்சனூர் ஆர். இளங்கோ, வேடசந்தூர் - டி.சாமிநாதன், திண்டுக்கல் - ஐ.பி.செந்தில்குமார், ஆத்தூர் - இ.பெரியசாமி, ஒட்டன்சத்திரம் - அர.சக்கரபாணி, மடத்துக்குளம் - இரா.ஜெயராமகிருஷ்ணன், உடுமலைப்பேட்டை - மு.ஜெயகுமார், வால்பாறை (தனி) - ஆ.சுதாகர், கோயமுத்தூர் தெற்கு - வீ.செந்தில் பாலாஜி, குன்னூர் - கே.எம்.ராஜூ, கூடலூர் (தனி) - மு.திராவிட மணி, ரிஷிவந்தியம் - வசந்தம் கார்த்திகேயன், உளுந்தூர்பேட்டை - ஜி.ஆர்.வசந்தவேல், விழுப்புரம் - டாக்டர் இரா.லட்சுமணன், வானூர் (தனி) கௌதம் திராவிடமணி, வந்தவாசி (தனி) எஸ்.அம்பேத்குமார், திருவண்ணாமலை - எ.வ.வேலு, வேப்பனஹள்ளி - பி.எஸ்.சீனிவாசன், ஆம்பூர் - அ.செ.வில்வநாதன், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி - உதயநிதி ஸ்டாலின், துறை முகம் - பி.கே.சேகர்பாபு உள்ளிட்டோர் வெற்றி பெற்றுள்ளனர்.*

**73 இடங்களை கைப்பற்றிய தி.மு.க. கூட்டணி!**

*குறிப்பாக தமிழ்நாட்டில் 23-ஆம் தேதி நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி 73 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளது. இதில் தி.மு.க. கழகம் தனிபட்ட முறையில் 59 இடங்களையும் காங்கிரஸ் - 5, தே.மு.தி.க. 1-, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி - 2, சி.பி.எம். -2, சி.பி.ஐ. -2, முஸ்லீம் லீக் -2, தொகுதிகளையும் பெற்றுள்ளன. இந்த தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி மூன்றாவது இடமாக 53 இடங்களையும் பிடித்துள்ளது. த.வெ.க. 108 இடங்களையும் பிடித்து ஆட்சி அமைக்க அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*


**ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சி தி.மு.க.**

*தி.மு.கழகம் மட்டும் தனிப்பட்ட முறையில் 59 தொகுதிகளுக்கும் மேல் வெற்றி பெற்று ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சி நிலையை பெற்றுள்ளது.*

---

## தி.மு.க. - மு.க.ஸ்டாலினுக்கு எனது ஆதரவு இன்னும் வலுவாக இருக்கும் !

### நடிகர் சத்யராஜ் உறுதி!



தி.மு.க.விற்கும், மு.க.ஸ்டாலினுக்கும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், தோல்வியை கண்டு துவண்டுவிடுபவர் கிடையாது என்றும், தி.மு.க.விற்கும், மு.க.ஸ்டாலினுக்கும் தனது ஆதரவு இன்னும் வலுவாக இருக்கும் என்றும் நடிகர் சத்யராஜ் தெரிவித்துள்ளார்.

நடிகர் சத்யராஜ் வெளியிட்டுள்ள வீடியோவில், கடந்த 5 ஆண்டுகளில் டெல்லிக்கு அஞ்சாமல் தமிழ்நாட்டிற்கு பல வளர்ச்சித் திட்டங்களை கொண்டுவந்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்று தெரிவித்துள்ளார். இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றியவர் மு.க.ஸ்டாலின் என்றும் அவருக்கு மனமார்ந்த நன்றிகள் என்றும் சத்யராஜ் குறிப்பிட்டுள்ளார்.

இனி வரும் காலங்களிலும், தி.மு.க.விற்கும், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும் தனது ஆதரவு இன்னும் வலுவாக இருக்கும் என்றும் சத்யராஜ் தெரிவித்துள்ளார்.

---

## புதுவை மற்றும் காரைக்கால் மழை!

*சென்னை, மே 6-*

*தமிழ்நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருச்சி பொன்மலையில் 10 செ.மீ மழை பெய்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில், தமிழகம் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 24 செல்சியஸ் வரை குறைந்தும், ஏனைய தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலையில் பொதுவாக குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதுமில்லை.*

*சுமார் 1.5 கிமீ உயரத்தில் தெற்கு மத்தியப் பிரதேசத்தின் மையப்பகுதிகள் முதல் மன்னார் வளைகுடா வரை விதர்பா, மரத்வாடா, உள் கர்நாடகா மற்றும் தமிழ்நாடு வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.*

*தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தேனி, திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, நாமக்கல், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் கூடிய கன மழை பெய்யக்கூடும்.*

*தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும்.*